MAY 2023

U/ID 33210/ URT2A/URL2A

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும் 30 சொற்களில் விடை எழுதுக

1. 'காந்தளூர்ச்சாலைக் கலமறுந்தருளிய' எனும் அடைமொழியைக் கொண்ட மன்னன் யார்?

2. பன்னிரு திருமுறைகளைத் தொகுத்தவர் யார்?

3. பராந்தகனின் சிறப்புகளைக் கூறும் செப்பேடுகளைக் கூறுக.

4. மராட்டிய மன்னர்களில் தலைசிறந்த மன்னன் யார்?

5. பாண்டியர்களின் ஆட்சிக்கு முடிவு கட்டிய படையெடுப்பு எது?

6. முஸ்லீம்களின் ஆட்சிக் காலம் – குறிப்பு வரைக.

7. மதுரா விஜயம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

8. மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் ஆயிரங்கால் மண்டபம் யாரால் கட்டப்பட்டது.

9. கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட ஆண்டு, இடம் யாது?

10. ஒத்துழையாமை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் பெயரைக் கூறுக.

11. ஜி.யூ.போப் குறிப்பு வரைக.

12. தமிழகத்தில் முதல் அச்சுக்கூடம் எங்கு தோற்றுவிக்கப்பெற்றது?

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 200 சொற்களில் விடை எழுதுக

13. சோழர்கால மகளிர் நிலை குறித்து விளக்குக.

14. முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் – குறிப்பு வரைக.

15. முஸ்லீம் இயக்கத்திற்கு எதிராக எழுந்த இயக்கம் குறித்தெழுதுக.

16. சிவாஜி குறித்த கருத்துகளை எடுத்துரைக்க.

17. விஜய நகரப் பேரரசின் ஆட்சிச் சிறப்பை விளக்குக.

18. விடுதலைக்குப்பின் அறிவுத்துறையில் தமிழகம் அடைந்துள்ள வளர்ச்சியை விளக்குக.

19. சிப்பாய்க் கலகம் நடைபெற்ற சூழலை விளக்கியுரைக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக

20. சோழர்களின் ஊராட்சி முறைகளை விவரிக்க.

21. மாலிக்காபூர் படையெடுப்பின் விளைவுகள் குறித்து கட்டுரைக்க.

22. சம்புவராயர்களின் அதிகாரத்தை விவரித்து எழுதுக.

23. நாயக்கர்கால சமுதாய நிலையை ஆராய்க.

24. ஆங்கிலேயர் ஆட்சியின் விளைவாக ஏற்பட்ட நன்மைகளைத் தொகுத்துரைக்க.

———————